யிருக்கும் வெள்ளோட்டுக்கு ஓருரவு கொண்டு போயி அவன் ஊடையத்தையும் தகறத்தி ஊரெயும் கொள்ளைபண்ணி சிருது றாணுவங்களெயும் வெட்டி அவன்தலையும் வெட்டி கொண்டு வந்து யெல்லோருங் காணத்தக்கதாயி வயித்த படியினாலே நாங்கள் இருபத்து நாலு நாட்டாருங் கூடி செட்டி வறத்தகற்கள் பல பட்டரைச் சாதிகளெயும் வறவளித்து நம்ம சனங்கள் மேற்கே நல்லுரிக்கிநாடு ஆனைமலைநாடு, காவிலிக்காநாடு, வாறக்கநாடு, ஆறுநாடு குறுப்பநாடு, ஒடுவெங்க நாடு இந்த யேளு நாட்டிலேயும் சீவாற்தனம் செய்ய வேண்டி நிமித்தியமாக பறந்து போயிருக்கும் சனங்கள் அந்தந்த சாதிகளுக்குண்டான வறமுரையை தப்பி நடக்குறதாக சேதி கேள்விப்பட்டுது.

அப்படி வரமுரைமை நடவாமல் நாயம் நடத்தை மற்ற குற்றம் வுருமை பெருமை தாய்தகப்பனுக்கு அமுது படையாதவன், புருஷன் பெண்சாதியே முடிக்கி விட்டவன் பெண்சாதியானவள் புருஷன் வார்த்தைக்கி யேறுமாறு பேசினவள், ஒருத்தரு கொருத்தர மித்துரு பேதகம் செய்குறபேற்கள் இப்படி நாலாவிதமாயி முரைமை தப்பி நடவாமல் தற்மம் நீதமாயி நடக்குறபடிக்கி இருபத்துநாலு நாட்டாருங் கூடி செட்டி வற்த்தகற்களும் பலபட்டரைசாதிக்கும் சம்மதிச்சு காளியணனுக்கு சாதி பட்டயம் நேமுகம் செயிது குடுக்க வேனுமென்று சகலமான செனங்களும் அனைவறும் கூடி ஈரோட்டு கொங்கிலியம்மன் சன்னதிக்கி போயி அம்மனுக்கு பதினாயிரம் பளம் நெபேதினம் செயித பின்பு காளியணனுக்கு சாதினபட்டயங் குடுத்தபோது பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து யிந்த பட்டயம் யெனக்கு சேறவேணுமென்று மரித்து சொன்னான்.

நல்லது யென்று தாறாபுரம் பிறமியணன் சொல்லும் வசனம். வுங்கள் ரெண்டு பேற படிக்கி திருவிளச் சீட்டெழுதி அம்மன் பாதத்திலே வைத்து ரெண்டு பேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை பிறதஷ்ஷனம் வலமாயி வந்து தெய்வசிகாமணி நான் முன்னமே யெடுப்பேனென்று சமத்துக் கூரினான். சறவண காங்கயன் சொல்லும் வசனம். நீ போயி வுன்பேற் படிக்கி இருந்த சீட்டு வுன் கையிக்கி வந்தால் வுனக்கே நேமுகம் செயிது முடிக்குரோமென்று சொன்னார்கள். அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்து வயிக்கவும் அம்மன் மடிப் பிடவையில் இருந்து ஒரு நீற் சற்ப்பம் வடவாமுகாக்கினி போலும் சீரி கோவித்து யெளுந்தது கண்டு பயந்து நடுநடுங்கி பிறண்டுருண்டு பின்னிட்டு வந்து சோபந்தட்டி மயங்கி விளுந்தவனெ காளியணன் யெடுத்து மாறபோடே அணைத்து நெஞ்செ தட்டி அம்மனைத் தியானிச்சி தண்ணீரெ முகத்துக் கெறச்சி பயத்தை தீற்து அவன் மனசெ தகிறியம் பண்ணினான்.

அதின் பிறப்பாடு பத்துபேறுங்கூடி காளியணனெ உன் பேறுபடிக்கி சீட்டெயடுத்துவறச் சொன்னார்கள். அதின் பிறகு சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை வலப்பிறதஷ்ஷனமாயி சுத்திவந்து கோவிலுக்குள்ளே பூதவும் நாக சற்ப்பம் கோபமாறி மாயமாயி போயிவிட்டுது. அதின் பிறகு அம்மன் பாதத்திலேயிருந்த திருவிளச் சீட்டெடுத்துவந்து பத்துபேருங் காணத்தக்கதாக சபையிலே வயித்தான். பத்துபேறும் சீட்டெ பாற்து வுன் பேறபடிக்கி சீட்டு